


குரல் 3.

இசை 3.

கல்விக் கணிகலன்
  கடமையும் ஒழுக்கமும்!
செல்வம் விளைப்பன
  செப்பமும் முயற்சியும்!
வெல்வ தென்பது
  பொய்படா வினைத்திறம்!
அல்லல் தருவன
  ஆவலும் சோம்பலும்!

தனித்தமிழ் சிறுவர் கலைஇதழ்

விலை 20 காசு.

# தமிழ்ச்சிட்டு

# பாதையில் நடத்தல்.

எப்பொழுதும் பாதையில்
இடது பக்கம் நடந்து போ!
தப்பில் லாமல் நடப்பதால்,
தடைகள் வாய்ப்ப தில்லையே!

நடந்து போகும் மேடையில்
நடந்து செல்லல் நல்லது!
கடந்து போக, இரு புறம்
கவனி; பின்பு விரைந்து போ!

படித்துக் கொண்டு நடப்பதும்,
பந்து தட்டிப் போவதும்,
இடித்துக் கொண்டு செல்வதும்
என்றும் தீங்கு செய்யுமே!

---

# உதவாதவை!

எருதில்லாத மொட்டை வண்டி,
ஏறிச் செல்ல உதவாது!
எருவில்லாத வெறுமை நிலமோ
எதுவும் விதைக்க உதவாது!

வெட்டுகின்ற கிணற்றுத் தண்ணீர்
வேகும் வீட்டிற் குதவாது!
கொட்டுகின்ற மழையோ என்றும்
குளித்துக் கொள்ள உதவாது!

கரையில் லாத ஏரித் தண்ணீர்
கழனிக் கென்றும் உதவாது!
உரையில்லாத செய்யுள் நூலோ
உணரார்க் கென்றும் உதவாது!

---

பாடல்கள்: துரை-மாணிக்கம்.

# தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ்
சிறுவர் கலைஇதழ்


இன்றைய பயனே நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர் நாளைய உலகம்!
நன்று செய்வதே நமக்குநல் வாழ்க்கை!
என்றும் அழியாது இருப்பது புகழே!


குரல்-௩. | தி பி. ௧௯௯௯ (துலை) ஐப்பசி நவம்பர்–68 | இசை-3


# மாண்பிலார் என்றும் மாணவர் ஆகார்!

மாணவப் பருவம் மாண்புடைப் பருவம்!
மாண்பிலார் என்றும் மாணவர் ஆகார்.
காண்பன எல்லாம் கலைநா கரிகம்!
மாண்பெனப் படுவது மனநா கரிகம்!
அடையும் மாற்றம் அனைத்தும் ஒப்பலாம்!
உடையும் நடையும் மாறலாம்; ஆனால்
உள்ளமும் ஒழுங்கும் உயர்ந்தே இருப்பன.
பள்ளி என்பதோ ஒழுக்கம் பயிலிடம்!
துள்ளும் இளமையின் துடுக்கை அடக்கி
விள்ளும் அறிவெலாம் விளங்கக் கற்றிடும்
கல்விக் கூடம் கலைபயில் கழகம்!


வெளியீட்டாளர், பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்.
தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.

செல்வச் செழுமையின் கல்வியே செழுமை.
விலங்கி னின்று வெளியே றியவன்—
விலங்கினும் உயர்ந்து விளங்கியோன் மாந்தன்!
விலங்கி னின்று விலகியோன் என்றால்

"விலங்கினும் உள்ளம் விளங்கப் பெற்றவன்
விலங்கினும் அறிவு விளங்கப் பெற்றவன்
விலங்கினும் ஒழுக்கம் விளங்கப் பெற்றவன்
விலங்கினும் பண்பு விளங்கப் பெற்றவன்"
—என்பதே பொருளாம்!
எனவே உளத்தால், அறிவினால், ஒழுங்கால்
இழிந்த ஒருவனை விலங்கே எனலாம்!

இழிந்த ஒருவனை வள்ளுவ ஏந்தல்
"மயிரனை யான்"—என மதிக்கிலா துரைப்பார்.

தலைமயிர் பெருமை தலையொடு வரையே!
தலையினின் றிழியின் தாழ்ச்சியுற் றிழிபடும்!
உயர்ந்துளான் பெருமையும் ஒழுங்குள வரையே!
ஒழுங்கிலான் ஒருவனை விலங்கே என்க!
குறள்மறை அவனைப் 'பிணம்'—எனக் கூறும்!

'மாந்தன்' என்னும் முழுவடி வத்தின்
ஏந்தும் இளமையே எழில்மிகு பருவம்!
இளமை அழியும்; வாழ்க்கையும் தாழும்!
இளமைக் கழகோ கல்வியை ஏந்தல்!
கல்விக் கழகு கடமையும் ஒழுங்கும்!
ஒழுங்கிலாக் கல்வி உப்பிலாப் பண்டம்!
எண்ணறப் படித்தும் எழுத்தறக் கற்றும்
கண்ணெனும் ஒழுங்கும் கடமையும் கல்லான்
மக்களில் தாழ்ந்தவன் எனவே மதிக்க!

தக்கவை இவற்றை உளத்துவை தம்பி!
மாணவப் பருவம் மாண்புடைப் பருவம்!
மாண்பிலார் என்றும் மாணவர் ஆகார்.

-பெருஞ்சித்திரன்.

# கழுதை அழுத கதை.

-துரை-மாணிக்கம்-

''காணுமற் சென்ற
கணவன் தனைநினைந்தே
ஊணுண்ண மாட்டேன்;
உறக்கம் கொளமாட்டேன்;
நீரருந்த மாட்டேன்;
நிழலில் படுத்திருக்கேன்
ஈருயிர்க் காரிநான்
இங்ஙன் இருந்ததனுல்,
கால்கள் சவசவக்கும்;
கண்கள் மிகவிருளும்!
வால்வீசக் கூடத்
தெம்பின்றி வாடிவிட்டேன்!

முட்டையினை வைத்தால்
முதுகெலும்பு 'விண்'ணென்னும்!
ஆட்டி அசைந்தசைந்தே
ஆற்றுக்குப் போய்ச்சேர்ப்பேன்!

வாழாமல் வாழ்ந்துவந்தேன்;
வந்தவரும் சேரவில்லை!
பாழடைந்த போக்கில்நான்
எத்தனைநாள் பார்த்திருப்பேன்?
நாயகனும் இல்லாத
வாழ்வுமொரு வாழ்வாமோ?
மாய்ந்திடுமுன் நான்காண
எண்ணி மனந்துணிந்தேன்.

ஓர்நாள் இரவில்
உறக்கமின்றி நானெழுந்தே
ஊர்முழுதும் தேடி
ஒருபயனும் இல்லாமல்
அண்டையுள்ள ஊர்சென்றே
ஆறுவயல் ஏரியெல்லாம்

குன்றெல்லாம் குட்டைக்
குளமெல்லாம் தேடிவிட்டு, ஓர்
ஒற்றையடிப் பாதைவழி
ஓய்ந்து நடந்துவந்தேன்.
மற்றையதை என்சொல்வேன்?
எங்ஙன் மனம்பொறுப்பேன்?

காளையரே! நானோர்
கழுதைப் பிறவியிலும்
பாழான பெண்பிறவி
அன்றோ? பதறிவிட்டேன்!
குக்கிக் குழைந்தேன்!
குலைநடுங்கிச் செத்துவிட்டேன்!
முக்கல் முணகலொடும்,
மூடுகின்ற கண்களொடும்
வாய்கோணி, நீர்வழிய
வாய்க்கால் புறத்தே, என்
நாயகனைக் கண்டேன்
நாடி தளர்ந்துவிட்டேன்!

'அய்யோ' வென் றோடி
அவர்மேல் விழுந்தழுதேன்!
மெய்யாகக் கண்திறந்தார்!
மீண்டுமவர் பேசவில்லை.

தோலாய் அவர்கிடந்தார்;
தூங்குவது போல்கிடந்தார்.
ஏலாமல் நின்றிருந்தேன்;
என்செய்வேன் பேதைநான்!
தன்னந் தனியாக
நோயாய்க் கிடந்திருந்து
தன்னந் தனியாகப்
போய்ச்சேர்ந்தார்! தாயானேன்!

சங்காக ஆர்க்கின்ற
என்னரசன் வல்குரலை
எங்கினிநான் கேட்பேன்?
இவள்பொருட்டே வாழ்கின்றேன்!"

—தொடரும்.



# பெரியோர் கதை!

## பாவலர் பாரதிதாசன்

–புலவர். திருமேனி–நாகராசன்.

செந்தமிழ்ச் சிட்டுகளே! செந்தமிழ்க்குச் சிறப்புச் செய்த செந்நாப்புலவர் பலர். அவருள் இருபதாம் நூற்றுண்டின் இணையற்ற புலவர் பாரதிதாசன் ஒருவர் ஆவார். பாரதிதாசன் பிறவிப் பாவலர். அவர் காரிகை கற்றுப் பாடுபவர் அல்லர். அவர் கருவிலே திருவுற்ற பாவலர். அவர் ஒரு முழுப்புலவர்.

அவர் பெருநிலை வாணிகர் குடியில் தோன்றினர். அவர் தந்தை கனகசபை என்பார். தாயார் மகாலட்சுமி என்பார். அவ்விருவருக்கும் அரும்பெறல் மகவாய் 1891–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 29–ஆம் நாள் பாரதிதாசன் பிறந்தார். பெற்றோர் பாவலருக்கு இட்ட பெயர் சுப்புரத்தினம் என்பது. சுப்புரத்தினம் பிற்காலத்தில் பாரதியாரிடம் கொண்ட விழுமிய பற்றுல் பாரதிதாசன் ஆயினர். பின்னர் அப்பெயரே நீக்கமற நிறைந்து விட்டது.

பாவலர் உரிய பருவத்தில் பள்ளியில் சேர்க்கப்பட்டார். அக்காலத்துப் புதுவையில் பிரெஞ்சுக்காரர் ஆட்சி இருந்தது. அதனுல் பிரெஞ்சுமொழிக் கல்விக்குச் செல்வாக்கு மிக இருந்தது. அதன் காரணமாக அவர் முதலில் பிரெஞ்சுமொழிப் பள்ளியில் சேர்க்கப்பட்டார். ஆனுல், அவர் மனம் செந்தமிழையே நாடிநின்றது. அதனை உணர்ந்த அவர் தந்தை அவரைத் தமிழ்க் கல்வியில் சேர்த்தார். பள்ளிக் கல்வியுடன், தமிழில் தனிப்பயிற்சியும் பெற்றுர். அதனுல், புதுவைக் கலவைக் கல்லூரியில் புலவர் தேர்வில் முதல்வராகத் தேர்வு பெற்றுர்.

பாவலரின் அறிவையும், திறனையும் கண்ட அரசினர் அவரை மறு ஆண்டே காரைக்காலை அடுத்த நிரவியில் ஆசிரியராக அமர்த்தினர். அவரது மாத ஊதியம் முப்பது உருபாவே. அவர் சரியாக

39 ஆண்டுகள் தமிழாசிரியராய் விளங்கினர். பணியின் காரணமாகப் புதுவைக்கும், காரைக்கும், அதன் பல்வேறு வட்டங்கட்கும் அடிக்கடி மாற்றப்பட்டார். 1909–இல் ஆசிரியப்பணி ஏற்ற அவர் 1948–இல் அதனின்றும் விலகினர்.

பாவலருக்குத் திருமணம் 1921–இல் நிகழ்வுற்றது. அவர் மனைவியார் பழநியம்மாள் என்பார். அவர் இல்லறத்திற்கு ஏற்ற பெருமை உடையவர். பாரதிதாசனின் இறுதிகாலம் மிக வருந்தற்குரியது. அவர் தமது கடைசிக் காலத்தில் தம் குடும்பத்தைப் பிரிந்து சென்னையில் நைந்தார். அவரைக் கொண்டு பாரதி வரலாற்றைப் படம் எடுப்பதாகச் சிலர் அவரிடம் கூறினர். அவரை அம் முயற்சியில் மடக்கினர். அவரும் கண்ணுறக்கம், மெய்வருத்தம் கடும்பசி மறந்து எழுதும் செயலில் நீங்காமல் ஈடுபட்டார். அதனால், நெஞ்சு நோயால் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுத் துன்புற்றார். அவருக்கு மனக்கவலை மிகுந்தது. இறுதியாக அவரது உயிர் மூச்சு 1964–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 21–ஆம் நாள் நின்றது.

பாவலர் பாரதிதாசன் பல உயரிய பண்புகள் உடையவர். அவர் அஞ்சா நெஞ்சத்தினர். மாற்றார் எவ்வளவு பெரியராக இருப்பினும் அவரைக் கண்டு அஞ்சார். அவரை நேருக்குநேர் நின்று எதிர்த்துப் பேசுவார். அவர் பெருமிதம் உடையவரும் ஆவார். எவரிடமும் அவர் தமக்கே உரிய செம்மாப்போடு பேசுவார். எங்கும் எவ்விடத்தும் பெருமிதம் தோன்றவே விளங்கி இருப்பார். அவர் இரக்கம் உடையவர்; ஏழைகளின் நண்பர். ஏழை இளைஞர்க்காகப் பெரும்பதவியில் உள்ளார்பால் தாமே சென்று அவர்கட்கு வேலை வாங்கிக் கொடுத்துள்ளார். அவர் பகுத்தறிவாளர் என்பதும் ஒன்று. எதனையும் தம் இயல்பான அறிவால் எண்ணித் துணிவார். பொருளற்ற கண்மூடித்தனமான பழக்கவழக்கங்களை அவர் வெறுத்தார்.

பாவலரின் தொண்டும் அருஞ்செயலும் அளவிட முடியாதவை. அவர் தொண்டு முழுவதும் தமிழ், தமிழர், தமிழ்நாடு நலம் பற்றியதே. அவர் தொழிலாளர்க்குத் தோள் கொடுத்து நின்றார். உழைத்து உருக்குலைந்த அவர்தம் நிலைகண்டு கண்ணீர் விட்டார். மக்களிடமுள்ள மடமையைச் சாடி நின்ற புரட்சியாளர், அவர். குலப் பிரிவுகளைச் சாடினர். தீண்டாதார் என்பார்க்குத் துணை ஆனார். அவர்கள் மேனிலை அடையத் தொண்டு ஆற்றினர். கைம்பெண் மணத்தை வலியுறுத்தினர். கலப்பு மணங்களைத் தாமே தலைமை ஏற்றுச் செய்தார்.

அவர் செந்தமிழ்க்குச் செய்த இலக்கியங்கள் பலவாம். அவை, குடும்ப விளக்கு, அழகின் சிரிப்பு, தமிழியக்கம், பாண்டியன் பரிசு, எதிர்பாராத முத்தம், இருண்டவீடு, இசையமுது, ஏற்றப்பாட்டு, காதல் நினைவுகள், காதலா கடமையா, தமிழச்சியின் கத்தி, இளைஞர் இலக்கியம், தேனருவி, மணிமேகலை வெண்பா, கண்ணகி புரட்சிக் காப்பியம், முதலிய பாட்டு நூற்களும், இரணியன், படித்த பெண்கள், சேரதாண்டவம், நல்லதீர்ப்பு, கழைக்கூத்தியின் காதல், கற்கண்டு, சௌமியன், அமைதி ஆகிய நாடக நூற்களும் ஆகும்.

பாவலர் பாரதிதாசனின் நல்லுடல் மறைந்து விட்டது. ஆனால், அவரின் புகழுடல் நிலைத்து நிற்கும். இஃது உறுதி. தமிழ், தமிழர், தமிழ்நாடு உள்ளவரை அவரும் உடன் இருப்பார். சிறுவர்களாகிய நீங்கள் அவருடைய பாடல்களைப் பாடி உணரவேண்டும். அவை உங்கட்கு விழிப்பைத் தரும்; புதிய ஊக்கத்தைக் கொடுக்கும்!

# பிறநாட்டுத் தேசியப் பறவைகள்.

இந்தியாவின் நாட்டுப்பறவை (தேசியப் பறவை) மயிலாகும். மற்ற நாடுகளின் நாட்டுப் பறவைகளைக் கீழே காண்க.

அமெரிக்கா—கழுகு

இலங்கை—காட்டுக்கோழி

கனடா—வாத்து

தென்மார்க்—வானம்பாடி

தென்னாப்பிரிக்கா—நீலக்கொக்கு

இங்கிலாந்து—இராபின்

சப்பான்-பச்சைக் கொண்டைக் கோழி

செர்மன்—வெண்கொக்கு

பர்மா—மயில்

அவாய்—வாத்து

—தொகுப்பு: வே. ஆவுடையப்பன், சேரன்மாதேவி.

## பிழை திருத்தம்.

குரல் 3 இசை 1 அட்டைப்பாட்டில்

'மிகைபட' என்பதை, 'மிகைப்பட'—என்றும்

'பகைவர்' என்பதை, 'பகைப்பவர்' என்றும் திருந்திக் கொள்ள வேண்டுகின்றேன்.

—ஆசிரியர்.

# மாந்தனின் உடலில்.........!

O நமது உடலில் ஒரு (சதுர) கன விரற்கடைப் பரப்பில் முப்பது இலக்கம் நுண்ணறைகளும் (cells) மூன்று அடி நீளமுள்ள அரத்தக் குழல்களும், பன்னிரண்டு அடி நீளமுள்ள நரம்புகளும், நூறு வெயர்வைச் சுரப்பிகளும், பதினைந்து எண்ணெய்ச் சுரப்பிகளும், இருபத்தைந்து நரம்பு முடிச்சுகளும் உள்ளன.

O நாம் ஒரு சொல் பேச 72 தசைகளை இயக்கவேண்டியிருக்கிறது.

O ஒவ்வொருமுறையும் நாம் 30 கன விரற்கடை அளவுள்ள காற்றை உள்ளிழுக்கிறோம்.

O ஆண்களைவிடப் பெண்கள் எளிதில் களைப்படையும் தன்மையினர். ஏனெனில் தீயகத்தை (Oxygen) தசைகட்கு எடுத்துச் செல்லும் சிவப்பணுக்கள் பெண்களின் அரத்தத்தில் குறைவாக இருப்பதால்தான். இதன் கரணியமாகவே பெண்களுக்கு நெஞ்சத்துடிப்பு மிகுதியாக இருக்கின்றது.

O ஒரு மாந்தன் ஒருநாளைக்கு, 25920 முறைகளுக்குக் குறையாமல் மூச்சினை உள்ளிழுத்து வெளிவிடுகின்றான். இவ்வாறு அவன் விடும் மூச்சின் எடை 35 கல்லெடைகளாகும். நாளும் ஒரு கல்லெடையளவு தீயகத்தை மாந்தன் உட்கொள்கின்றான்.

O பத்துகோடிப்பெயர்களின் தலைமுடியை ஆய்ந்து பார்ப்பினும் அவர்களில் இருவரின் தலைமுடியாவது ஒன்றுபோலிராது.

O ஒரு கன நுண்சீரெடை (மில்லிமீட்டர்) அரத்தத்தில் 50,00,000 சிவப்பணுக்களும் 10,000 வெள்ளை யணுக்களும் உள்ளன. அவை 500:1 என்ற முறையில் உள்ளன.

O நம் உடலில் 59% நீர் இருக்கிறது. பருப்பொருளாகிய எலும்பிலும் பாதியளவு நீரேயுள்ளது. அரத்தத்தில் 80% நீர் உள்ளது.

O அரத்தத்தில் உள்ள சிவப்பணுக்கள் தீயகத்தை உடலின் மூலை முடுக்குகளெங்கணும் எடுத்துச் செல்கின்றன. வெள்ளையணுக்கள் நம் உடலின் அரணாக நின்று நோய் விளைவிக்கும் நுண்ணுயிரிகளை அழிக்கின்றன.

O குழந்தைகளின் கைநாடி ஒரு நிமையத்திற்கு 120 தடவைகளும், பெரியவர்களது நாடி 80 தடவைகளும், இளைஞர் நாடி 90 தடவைகளும் துடித்துக் கொள்கின்றன.

–தொகுப்பு: வே. ஆவுடையப்பன், சேரன்மாதேவி.

# இருண்ட வீடு.



மூலக்கதை: பாவேந்தர் பாரதிதாசன்
நாடக ஆக்கம்: கு. ஐந்தெழுத்தன்

## காட்சி-13.

[நல்ல வேளையில் அளியர் வீட்டில் நுழைகிறார்.]

அளியர்: (தங்கையைப் பார்த்து) என்னம்மா? நலந்தானா? குழந்தை எப்படியிருக்குது? பெரியவன் நலமா? குடும்பம் எப்படி?

தலைவி: ஏதோ இருக்கிறேன், அண்ணா!

[பாயிற் படுத்துறங்கும் குழந்தையைப் பரிவுடன் எழுப்பி, தாம் வாங்கிவந்த மாம்பழங்களையும், விளாம்பழத்தையும், பூந்திப் பொட்டணத்தையும் அதன் எதிரில் வைக்கிறார். குழந்தை அவற்றைத் தின்னாமையால், அவற்றின்மீது ஈயும் எறும்பும் மொய்த்துக் கிடக்கின்றன.]

## காட்சி-14.

[வீங்கிய உதடுகளுடன், திருப்பிப் படுக்க இயலாமல், மல்லாந்து படுத்திருக்கும் பெரிய பையன், மாம்பழமும் விளாம்பழமும் வைத்திருக்கும் பக்கமாகத் தன் பார்வையைச் செலுத்தி, மாமனைப் பார்க்கிறான். அவனது உள்ளத்தைப் புரிந்துகொண்ட அவர், தாம் சென்னையில் வாங்கிவந்த விளையாட்டு வேட்டுக்குழலை (கைத்துப்பாக்கியை) அவனுக்குத் தருகிறார். வாங்கிக்கொண்ட பையன், பற்கள் வெளியே தெரியாமல் ஊமைச்சிரிப்பு சிரிக்கிறான். அதைப் பார்த்து அவர் சிரிக்க, அவரைப் பார்த்துத் தலைவியும் சிரிக்கிறாள். அவர் அதைப் பையனிடமிருந்து வாங்கி. உண்மையான வேட்டுக்குழல்போல் அஃது இயங்கும் வகையை விளக்கிக் காட்டுகிறார். பையன் வியப்படைகிறான்.]

தலைவி: அண்ணா, அண்ணா! அதை அவனிடம் கொடுக்காதீர்கள். குறும்புக்காரப் பயல்! சும்மா இருக்கமாட்டான்! பேசாமல் பெட்டிமீது வைத்து விடுங்கள்.

(அதைப் பெட்டிமீது வைக்கிறார், அவர்.)

## காட்சி-15.

அளியர்: (வீட்டுத் தலைவியைப் பார்த்து) என்னம்மா? பெரிய பையன் நல்லா படிக்கிறானா?

தலைவி: அவன் குறிப்பைப் பார்த்தோம். பத்தொன்பது ஆண்டுவரை யிலும் அவனுக்குப் படிப்பே வராதாம். இருபது ஆண்டு முடிஞ்ச பிறகுதான் அறிவு வருமாம்; அப்புறம் உலகமே எனக்குத்தான் சொந்தம் என்பானும்!

அளியர்: அப்படியா? கையோடு கையா, இந்தக் குழந்தையின் குறிப்பையும் காட்டியிருக்கலாமே!

தலைவி: காட்டினேன் அண்ணு! இதுக்குத் தொண்ணூறு ஆண்டாம்; இதைக் கல்லுமேலே தூக்கிப்போட்டாலும் அவ்வளவு எளிசா உயிர் போகாதாம்! இப்போகூட இதுக்கு ஒண்ணும் இல்லே. மந்தத்தாலே மயக்கமாக் கிடக்குது! வளருகிற பிள்ளைக்கு நோய் வரதும் போறதும் உலகத்திலே உள்ளதுதானே! ஏழு மலையானை நம்பி காப்பு கட்டினேன். அவன் கண்பார்த்தா நாளைக்கே நல்லாப் போயிடும்!

## காட்சி-16.

அளியர்: ஏம்மா! சமையல் ஆயிட்டுதா?

தலைவி: ஆமாம், அண்ணு! இந்த அலைச்சலிலே, அதைக் கேட்கவே மறந்துட்டேன். ஏன் அண்ணு, குளிக்கிறயா?

அளியர்: வெந்நீர் இருக்குமா?

தலைவி: இதோ போட்டுடறேன்.

அளியர்: அதிருக்கட்டும், கொஞ்சம் வெற்றிலை கொண்டுவா.

தலைவி: பார்த்தியா? இதுகூட எனக்கு நினைப்பில்லை. (வெற்றிலை முதலியன தட்டில் கொண்டுவந்து வைக்கிருள்.

அளியர்: (வெற்றிலை போட்டபடியே) காலையிலே நாலுமணிக்கு வீட்டைவிட்டுக் கிளம்பினேன். கிளியனூரிலே சிற்றுண்டி சாப்பிடலாம்னு சுற்றுமுற்றும் பார்த்தேன். கடையெதுவும் இல்லை. அதற்குள்ளே வண்டியும் புறப்பட்டுவிட்டது. பசியோட ஏறி உட்கார்ந்தேன்; இங்கே வந்து இறங்கினேன்.

தலைவி: (அவருடைய குறிப்பைப் புரிந்து கொள்ளாமல்) அடடா! எங்க அண்ணன் வந்த வண்டியே வண்டி! சுருக்கா வீட்டண்டை கொண்டுவந்து விட்டுட்டுதே!

காட்சி-17.

[இரவு ஏழுமணி. வேலைக்காரிகள் பாலைக் காய்ச்சித் தங்கள் வயி றாரக் குடித்தபின், தலைவிக்கும் ஒரு செப்பு பால் தருகின்றனர். பெரிய வன் பால்குடிக்க இயலாதாகையால், அவன் பங்கையும் பணிப்பெண் களே குடித்து விடுகின்றனர்.]

[இதற்கிடையில் வீட்டுத் தலைவியின் அண்ணன், உணவு விடு திக்குச் சென்று சாப்பிட்டு மீள்கிறார். இதை யறியாத வீட்டுத்தலைவி, தன் அண்ணனுக்குத் தேநீர் போட்டுத் தரும்படி சங்கிலிக்குக் கட்டளை யிடுகிறாள்.]

சங்கிலி: (வேண்டா விருப்புடன்) ஏங்க, தேநீர் கீநீர் ஏதாவது சாப் பிடறீங்களா?

அளியர்: (அவள் குறிப்பை யுணர்ந்து) அதெல்லாம் ஒன்றும் வேண்டாம் அம்மா; உனக்கு ஏன் தொல்லை?

காட்சி-18.

தலைவி: ஏன் அண்ணு? நம்ம நாலாவது வீட்டுத் தாமரைக்குத் திரு மணம்னு கடுதாசி வந்ததே, உனக்குத் தெரியுமா?

அளியர்: (சிரித்துக்கொண்டே) என்ன, அது? தாமரை செத்துப்பல நாள் ஆச்சே!

தலைவி: இல்லை அண்ணு! இதோ, இதைப்பாரு! (மஞ்சள் உறையில் வந்த மடல் ஒன்றைக் கொண்டுவந்து தருகிறாள்.) [உறை யைக் கிழித்துப் படிக்கத் தொடங்குகிறார் அவர். வீட்டு வாயி லில் இயங்கிவந்து நிற்கிறது. தலைவர் வீட்டில் நுழைகிறார்.]

தலைவர்: (சலிப்புடன் ஓய்வு-நாற்காலியிற் சாய்ந்து) அந்தப் பயல் ஐதராபாக்கம் போயிட்டான்! பணமும் போச்சு; கூட இரு பத்து உருபா வீண் செலவும் ஆச்சு! போதாத குறைக்குப் பட்டினியும் அலைச்சலும் ஒரு பக்கம்!

[மடலில் எழுதப்பட்டிருந்த செய்தியை அளியர் படிக்கிறார்.]

"அன்புடையீர்! அந்த ஆள் இன்னும் ஐந்துநாளில் ஐதராபாக் கம் போகத் திட்டமிட்டிருக்கிறான். மடல் கண்டவுடன் வரவும். வந்

தால் வட்டியும் முதலும் வாங்கிப் போகலாம். அவன் அங்குப் போன பின்பு நீர் இங்குவருவது வீணே. இப்படிக்கு வீராசாமி."

காட்சி-19.

தலைவர்: (மனைவியை நோக்கி, எரிச்சலுடன்) இந்த மடல் எப்போது வந்தது?

தலைவி: இது வந்து ஏழெட்டு நாளாச்சுது. நீங்க எங்கே திருமணத்துக்குப் போகப் போறீங்கன்னு, அதை அப்படியே அடுப்பங்கரையிலே போட்டு வச்சேன். மஞ்சள் தாளுன்னு திருமணக் கடுதாசிதானே!

தலைவர்: (சினத்துடன்) அட சீ, பதரே!

தலைவி: சரிதான், அடக்கு ஐயா!

தலைவர்: நீ எங்கிருந்தடீ வந்தாய், என் குலத்தைக் குலைத்துப்போட! நீ காலடி வைச்ச காலத்திலே இருந்து, என்னை ஆண்டியாக்கிறதுக்கு வேண்டியதைத்தானே செய்தாய்? நீ செய்யறது எல்லாம் ஒரே அழும்பு தானே!

தலைவி: போதும், ஐயா! நீ தேடினதையெல்லாம், ஊருக்குத்தானே அழிச்சே! உருப்படவா போறே! நாட்டுக்குத்தானே அழிச்சே! நல்லாயிருப்பியா? இனி நீ எங்கே முன்னுக்கு வரப்போறே!.... ஊம்....அது ஏது?

[சண்டையைக் கண்ட அளியர், சந்தடி செய்யாமல் ஊருக்குப் புறப்படுகிறார்.]

(தொடரும்)


## தமிழ்ச்சிட்டு, கடலூர்-1.

(தனித்தமிழ் சிறுவர் கலையிதழ்)

### மாற்றப்பட்ட உறுப்பினர் கட்டணங்கள்.

| | உள்நாடு. | வெளிநாடு. கொழும்பு. |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் உருபா | 2-50 | 4-00 |
| தனியிதழ் ,, | 0-20 | 0-30 |

(அரையாண்டுக் கட்டணம் இல்லை)

ஓரிதழுக்கு 40 காசு மேனி முன்பணம்கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க!

# நகர்கின்ற கண்டங்கள்!

டச்சு நாட்டில் உட்ரெக்ட் நகர் அருகே ஒரு பழைய கோட்டையில் உட்ரெக்ட் மாநிலப் பல்கலைக்கழக காந்த ஆராய்ச்சி நிலையம் இருக்கிறது. கற்களின் காந்தத் தன்மை குறித்து இங்கு ஆராய்ச்சிகள் நடத்தப்படுகின்றன. குறிப்பாக எரிமலைக் கற்கள், செந்நிறக் கற்கள், களிக் கற்கள் ஆகியவை இவ்வகை ஆராய்ச்சிக்கு உகந்தவை. இவற்றில் காந்தமூலம் மிகுதியாக உள்ளது. காந்தக் கற்களின் காந்தத் தன்மையையும், திசையையும், நுண்ணிய கருவிகளின் உதவியைக் கொண்டு கணக்கிடலாம். எரிமலையிலிருந்து வழிகிற குழம்புக் கற்கள், குளிரும் போது, உலகின் காந்த நிலை எந்த திசையில் இருக்கிறதோ, அதற்கு ஏற்ப, கற்களின் காந்தத்திசை அமையும்.

பல்வேறு காலங்களின் காந்தக் கற்களை ஆராய்ந்தபோது, உலகின் காந்த நிலை மாறி வந்திருப்பது புலனாகிறது. இப்பொழுது பல பிரிவுகளாகப் பிரிந்திருக்கும் பல கண்டங்கள் நிலையாக இருந்ததில்லை என்று தெரிய வருகிறது. கடந்த 30 கோடி ஆண்டுகளில் அவை, பல்லாயிரக்கணக்கான கற்கள் இடம் நகர்ந்துள்ளன.

இந்தியாவின் நடுவிலும், மேற்குப் பகுதிகளிலும் பல கற்களை எடுத்து டச்சு அறிவியலறிஞர்கள் ஆராய்ச்சி நடத்தினார்கள். இந்தியத் துணைக்கண்டமும் இடம் பெயர்ந்திருப்பது நன்கு தெரிகிறது. 22 கோடி ஆண்டுகளுக்கு முன்பு இந்தியத் துணைக்கண்டம் நில நடுக்கோட்டுக்குத் தெற்கே இருந்திருக்க வேண்டும். இடப்பக்கமாக வட திசை நோக்கி மெதுவாக நகர்ந்து நகர்ந்து தற்போதைய இடத்திற்கு இந்தியத் துணைக்கண்டம் வந்திருக்கிறது என்று அவ் வறிவியலறிஞர்கள் கருதுகின்றனர். 0

## மூழ்கிய கப்பலைத் தூக்கிய காற்றுப்பைகள்!

கடலில் மூழ்கிய கப்பலை வெளிக்கொணரக். காற்றுப்பைகளைப் பயன்படுத்தி வெற்றியும் கண்டிருக்கிறார்கள், டச்சு அறிவியலறிஞர்கள்.

நெதர்லாந்து கடற்கரைக்கு ஆறுமைல் தொலைவில் 1965 சூலையில் கடுமையான புயலில் "சகோமினு" என்னும் மீன்பிடி கப்பல் மூழ்கிவிட்டது. கடலுக்குள் 56 அடி ஆழத்திற்குள் கப்பல் கிடப்பதை, நீர்மூழ்கிப் புரிவினையாளர்கள் கண்டுபிடித்தார்கள்.

கடலில் மூழ்கிய கப்பலைவெளியே கொண்டுவர, வியப்பானதொரு முறையை டச்சு அறிஞர்கள் மெற்கொண்டார்கள்' கப்பலில் சில அறைகளுக்குள் "பாலீத்திரீன்" என்னும் ஒருவகைக் காற்றுப்பூதி (பலூன்) களைக் கட்டிவிட்டார்கள். இவை தண்ணீரைவிட இலேசானவை. தண்ணீரில் நணையாதவை. எனவே. இவை கப்பலை நலுங்காமல் கடல்நீர் மட்டத்திற்குத் தூக்கிவந்து விட்டன. 0

# தெரிந்து கொள்ளுங்கள்

O பனி (இமய) மலையின் சரிவில் புதையுண்ட மீன் எலும்புகள், சங்குகள், சிப்பிகள், உறைந்த கடற்பாசி இனங்கள் ஆகியவற்றின் சில்லுகளும் சிதைவுகளும் இன்றும் ஆராய்ச்சியாளர்களால் கண்டெடுக்கப்படுகின்றன. ஆதலால் இம்மலை ஒரு காலத்தில் மிகப்பெரிய கடலின் அடி நிலமாக இருந்திருக்க வேண்டுமென்றும், உள்நிலக் கிளர்ச்சியால் மேலெழுந்து உயர்ந்து மலையாயிற்றென்றும் அறியப்படுகின்றது.

O அசந்தாவிலுள்ள 27 கற்புழை(குகை)களையும் வெட்டிச் செதுக்கி முடிக்க 700 ஆண்டுகள் ஆயினவாம்.

O வானவில்லை நாம் பார்க்கும்பொழுது அரைவட்ட வடிவமாகத் தெரிகின்றதில்லையா? வானூர்தியில் பறக்கும் ஒருவரின் கண்களுக்கு அது முழு வட்டமாகத் தெரியும்.

O கருமுகில்கள் ஒன்றோடொன்று மோதி மின்சாரம் வெளிப்படுவதால் இடிமுழக்கம் கேட்கின்றதில்லையா? இவ் விடியோசையை நிலப் பகுதியில் உள்ள நாம் மட்டுந்தான் கேட்க முடியும். கடலில் உள்ளவர்களுக்குக் கேட்காது.

தொகுப்பு: அர. சந்திரசேகரன், புதுவை–7

---

# சுவரொட்டி ஒழுங்கு!

தெருச்சுவர்களில் மனப்போன போக்கில் சுவரொட்டிகளை ஒட்டி நகரின் அழகைக் கெடுக்கும் அவலநிலையைக் கண்கூடாகப் பார்க்கிறோம். ஆலந்து நாட்டில் உட்ரெக்ட் நகரில் நகராட்சி அதிகாரிகள் இதைத் தவிர்க்க ஒருமுறை வகுத்தனர். மூன்று நெருக்கமான இடங்களில் பெரிய மரப்பலகைகளை மாட்டி வைத்திருக்கிறார்கள். சுவரொட்டிகள் இவற்றில்தான் ஒட்டப்படுதல் வேண்டும். யார் வேண்டுமானாலும் தங்கள் விருப்பம்போல, இப் பலகைகளில் தங்கள் சுவரொட்டிகளை ஒட்டிக்கொள்ளலாம். ஆனால் ஒரு கட்டுப்பாடு. சுவரொட்டி ஒட்டுபவரின் பெயரும், முகவரியும் அதில் குறிக்கப்பட்டிருக்க வேண்டும். இப் பலகைகள் தவிர வேறெங்கும் சுவரொட்டிகள் ஒட்டுவது தடைசெய்யப்பட்டுள்ளது.

---

# பயன் மொழிகள்.

கொல்லாமையிலும், வாய்மையிலும் தோல்வி என்பதே கிடையாது. —காந்தியடிகள்.

மறவன் வாழ்வான். கோழை வாழவே முடியாது. மொழியில், வாழ்வில் மறத்தனம் இல்லாதவன் பிறந்தும் பிறவாதவனே.

திரு. வி. க.

எந்த மாந்தன் வெற்றிகொள்ள விரும்புகிறானோ, அவனுக்குத் தனது உள்ளத்தையும், எண்ணங்களையும் மறைத்து வைக்கும் ஆற்றல் வேண்டும். —சுதர்சன.

அறியாமை கழக்கத்தின் தாய். துன்பத்தின் பிறப்பிடம்; குருட்டு நம்பிக்கையின் அன்னை; இடுக்கண் தோன்றிய இடம்; அழிவும் வறுமையும் வாழும் தாயகம் —இங்கர்சால்.

ஒருவன் கற்றுள்ள நூற்களின் அளவு அவனது நுண்ணறிவு விளங்கும். —ஔவையார்.

விரிந்த கற்பனை வளமும், எல்லாப் பொருட்களிலும் ஊடுருவும் பேராற்றலும் இன்றி எந்தக் கலைஞனும் என்றும் நிலைத்திருக்கும் இலக்கியத்தைப் படைக்க இயலாது. —காண்டேகர்.

வாழ்நாளில் இனிய பருவம் இளமை. இதை நாம் முதுமையில் தான் உணர்கிறோம். —கிளேடர்.

ஏழையின் முகம் மலரும்போது இறைவனின் உள்ளமும் மலர்ச்சி கொள்கின்றது. —மாப்பசான்.

கல்லும் மண்ணும் தெய்வமல்ல; என் தாய்தான் எனக்குத் தெய்வம். —ஓமர்.

கடவுளை வணங்குதல் என்றால் என்ன? தேங்காய் உடைப்பதா? திருவிழாச் செய்வதா? படையல் கொடுப்பதா? கோவில் கட்டுவதா? அல்ல, அல்ல; ஒழுக்கமாய் நடப்பது. உயர்ந்த பண்புகள் கொள்வது—இதுவே உண்மையான கடவுள் வழிபாடு. —ஈ. வே. ரா.


பொருளற்ற சொற்களைக் கொண்டே நூறு பாடல்கள் சொல்வதைவிட பொருள் நிரம்பிய ஒரே பாடல் சிறப்புடையது; அதைக் கேட்டதும் ஒருவன் அமைதி பெறுகிறான். —புத்தர்.

அரத்தத்தினால் அடித்துத் திருத்தினாலொழிய குழுகாயத்திற்குத் தன் கொடுமையான குற்றங்கள் எப்போதுமே தெரிவதில்லை.

—காண்டேகர்.

தாய்மொழியைத் திறமையாகப் பயன்படுத்த அறியாத எவனும் பிற மொழியைத் திறமையாகப் பயன்படுத்திக்கொள்ளக் கற்றுக்கொள்ளுதல் கடினம். —பெர்னாட்சா.

(தொகுப்பு க. க. ஆறுமுகம்.)



# புதிர்....?

தம்பி, தங்கைகளே! சென்ற இதழின் கடைசிப் பக்கத்தில் புதிரைத் தேடியிருப்பீர்கள் ஆனால் ஏமாற்றம் அடைந்திருப்பீர்கள். புதிர் தொடர்ந்து வராமைக்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று இடமின்மை; இரண்டு நீங்கள் இப்பகுதியில் போதிய ஆர்வம் காட்டாமை! ஆமாம்! தம்பி தங்கைகள் தங்கள் தங்கள் மூளைக்கு வேலை கொடுப்பதே மிகக் குறைவு. இல்லை என்றே சொல்லிவிடலாம். நல்ல நல்ல புதிர்களாக எழுதி விடுத்தால்தானே! ஏதோ இரண்டொரு தம்பிகள் எழுதுகின்றனர். அவர்களும் இதற்கு முன்பு வந்தனபோலவே எழுதுகின்றனர். சிலர் வந்தவற்றையே எழுதி விடுத்து விடுகின்றனர். போகட்டும்; இனிமேலாகிலும் இப் பகுதியை நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள்!

இதோ! இரண்டு புதிர்களைக் கீழே கொடுத்துள்ளார் ஒரு தம்பி. அவர்பெயர் இ. செயராமன்–(மடுக்கரை, புதுவை மாநிலம்). அவற்றிற்குவிடை கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்!

புதிர்–1: ஒரு பரிசுச் சீட்டின் முதல் எண்ணையும் இரண்டாம் எண்ணையும் கூட்டினால், அந்தச் சீட்டின் ஐந்தாம் எண்ணையும் ஆறும் எண்ணையும் கூட்டியதற்குச் சமமாகும். ஐந்தாம் எண்ணையும், நான்காம் எண்ணையும் கூட்டினால் மூன்றும் எண்ணையும் இரண்டாம் எண்ணையும் கூட்டியதற்குச் சமமாகும். நான்காம் எண்ணையும் முதல் எண்ணையும் கூட்டினால் ஆறும் எண்ணையும் மூன்றும் எண்ணையும் கூட்டியதற்குச் சமம். ஆறுவது எண் 3. முதல் எண் 7. பரிசுச்சீட்டின் எண் என்ன?

புதிர்–2: ஒரு குடும்பத்தில் உள்ள ஒவ்வொரு பையனுக்கும் எத்தனை அண்ணன் தம்பிகள் உளரோ, அத்தனை அக்காள் தங்கைகளும் உளர். ஆனால் ஒவ்வொரு பெண்ணுக்கும் எத்தனை அக்காள் தங்கைகளோ அவர்களைப்போல் இரண்டுமடங்கு அண்ணன் தம்பிகள் உளர். அக்குடும்பத்தில் உள்ள பிள்ளைகளில் பெண்கள் எத்தனை? பையன்கள் எத்தனை?

விடை அடுத்த இதழில்!

# 'இந்தி'-யில் தமிழ்ச் சொற்கள்.

(பட்டியல்-1)

| தமிழ். | இந்தி. | தமிழ். | இந்தி. |
|---|---|---|---|
| அடே | அரே! | சவை(மெல்) | சபா, |
| அரங்கம் | ரங்க் | சாயுங்காலம் | சாயம் |
| அலை (வி) | ஹில் | சாலை | சாலா |
| அலை (பெ) | ஹிலோல் | சிட்டு(குருவி) | சிடா(ஆண்) |
| ஆம் | ஹாம் | சிட்டு(சிறியது) | சோட்டா |
| இத்தனை | இத்னு | சில்(ஈரம்) | சீல் |
| இதோள் | ஹிதர் | சிறுத்தை | சீத்தா, சீட்டா |
| உதடு | ஓண்ட் | சீரகம் | ஜீரா |
| உதோள் | உதர் | சுக்கு | சூக் |
| உம்பர் | உப்பர் | சும்மா | சுப் |
| உலகு | லோக் | சல்(–செல்) | சல் |
| உழுந்து | உடத் | செப்பு(லு) | சப்பல் |
| ஐயோ | ஹாய் | சோடி | ஜோடி |
| ஓரம் | ஓர் | சோம்பு(தல்) | சோ(தூங்கு) |
| கட்டில் | காட் | சோளி | ஜோல்னு |
| கட்டை | காட் | தண்(குளிர்ந்த) | தண்டா |
| கடி | காட் | தண்டனை | தண்டன |
| கலை | கலா | தத்தை(கிளி) | தோத்தா |
| கழுதை | கதா | தயிர் | தஹி |
| கன்னல்(கருப்பு) | கன்னு | தா | தேவ் |
| கடு(கடினம்) | கடா | தாள், தாழ் | தாலீ(திறவு |
| கால்(காலம்) | கால் | தேவு,தேவன் | தேவ், [கோல் |
| கிழான்(உழவன்) | கிஸான் | நாடகம் | நாட்டக் |
| குதி | கூத் | நாவாய் | நாவ் |
| குயில் | கோயல் | நீலம் | நீல் |
| கூலி(யாள்) | கூலீ | நேரம் | தேர் |
| கொச்சு | குச் | நோக்கு | தேக் |
| கொட்டறை | கொட்ரீ | பக்கம் | பகம் |
| கோட்டை | கோட் | படி(கீழிரு) | பைட் |
| கோலி | கோலீ | படி | பட்(வாசி) |
| சப்பட்டை | சப்ட்டா | படு(பெரிய) | படா |
| சமையம் | சமய | படு(விழு) | பட் |

[பின்பக்கம் பார்க்க.]

## பட்டியல்-2

| தமிழ். | இந்தி. | தமிழ். | இந்தி. |
|---|---|---|---|
| படு(பெரிய) | படா | முரப்பு | முரபா |
| பட்டினம் | பட்டன | முள்(கு) | மில்(வி) |
| பட்டி | பட்டீ | முள்ளங்கி | மூலீ |
| பதம்(சோறு) | பாத் | மூக்கு | நாக் |
| பழம் | பல் | தோள் | தோ |
| பித்தளை | பீத்தல் | மெல் | முலா(யம்) |
| பிள்ளை | பில்லா(குட்டி) | மோடு,மோட்டு | மோட்டா |
| புருவம் | பௌம் | | |
| பூ | பூல் | வா | ஆ |
| புகல்(சொல்) | போல் | வாங்கு(வளை) | பாங்க் |
| பூதம் | பூத் | விதை | பீஜ் |
| பெட்டி | பேட்டக | வெண்டை | பிண்டீ |
| மடி | மரி-மர் | வேம்பு | நீம்பு |
| மந்தி(பெண்குரங்கு) | பந்தர்(குரங்கு) | அத்தன் (தந்தை) | ஆஜா (பாட்டன்) |
| மந்திரம் | மந்திர்(கோயில்) | அம்மை, அம்மா | அம்மா, (மாம், மா |
| மயில் | மோர் | அப்பன், அப்பா | அப்பா, பாப் |
| மயிலை | பைல் | அன்னை | அன்னு, அன்னி (செவிலி) |
| மனம் | மன் | | |
| மாதம் | மாஸ் | தாத்தா | தாதா |
| மாலை | மாலா | பிள்ளை (பிட்ட-தெ) | பேட்டா (மகன்) |
| மாறு(அடி) | மார் | | பேட்டீ(மகள்) |
| மிளகு | மிர்ச் | மாமன், மாமா | மாமா |
| மீசை | மூஞ்ச் | மாமி | மாமீ |
| முகம் | மு | களி | கேல் |
| முகரை | முக்ரா | செடி | ஜாடு |
| முட்டி | முட்டீ | செருப்பு | சப்பல் |
| முண்டனம் | முண்டன | நாரத்தை | நாரங்கி |
| முண்டா | மோண்டா(தோள்) | | |
| முண்டு | முண்ட(Stump) | | |
| முத்து | மோத்தீ | | |
| முரசு | முரஜ | | |

(பாவாணர்–தமிழ் வரலாறு)

தென்மொழி மின் அச்சகம், கடலூர்–1.